தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 8, வியாழக்கிழமை.

மாசி 25, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து''

அவையில் காதோடு நெருங்கிப் பேசுதலையும், சேர்ந்து சிரித்தலையும் தவிர்க்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வேலூர் வட்டம், கணியம்பாடி பகுதிக்கான குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகள்.

211—(* வினா எண் 19141)—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கணியம்பாடி பகுதியில் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கவில்லை என்ற புகார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்துள்ளதா ?

(ஆ) இது குறித்து எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) வேலூர் வட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 23 மதுரா கிராமங்களில் குடும்ப அட்டை வழங்காமல் விடுபட்டுப்போன குடும்பங்களைக் கணக்கெடுப்பு செய்து குடும்ப அட்டைகள் எல்லா குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பல கிராமங்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல் குடியாத்தம் தொகுதியிலும் பல்வேறு கிராமங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கேட்ட நேரத்தில் குடும்ப அட்டைகள் போதுமான அளவிற்கு மத்திய அலுவலகத்திலிருந்து வராததன் காரணமாக வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அந்தப் பகுதிகளிலும் குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணியம்பாடி பகுதியில் விட்டுப் போன குடும்பங்களுக்கு எல்லாம் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டு உள்ளன. ஆனால் குடியாத்தம் பகுதியினுடைய தன்மைகள் தெரியவில்லை. அங்கேயும் வழங்கப்பட்டு இருக்கத்தான் வேண்டும். இதுபற்றி தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரமான தகவல்கள் தரமுடியும்.

1983 ஜனவரி முதல் ஜூன் வரை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய உணவு பொருட்களின் அளவு.

212—(*வினா எண் 20909)—திரு. எஸ். வரதராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983 ஜனவரி முதல் ஜூன் வரை மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்த அரிசி மற்றும் உணவுப் பொருட்களின் அளவு எவ்வளவு ?

(ஆ) மாநில அரசு மத்திய அரசிடம் கோரியது எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1983 ஜனவரி முதல் மார்ச் வரை மத்திய அரசு மாநில அரசுக்கு அரிசி ஒதுக்கீடு செய்யவில்லை, ஏப்ரல், மே மாதங்களுக்கு மாத மொன்றுக்கு 15,000 டன்களும், ஜூன் மாதத்திற்கு 25,000 டன்களும் அரிசி ஒதுக்கீடு செய்தது, ஜனவரி, பிப்ரவரி மார்ச் மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 4,000 டன்களும், ஏப்ரல் மாதத்திற்கு 20,000 டன்களும், ஜூன் மாதத்திற்கு 25,000 டன்களும் கோதுமை ஒதுக்கீடு செய்தது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS